மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. இளம்வழுதி : கேள்வியை அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 120 நாட்கள் மட்டும் வேலை செய்தால் என்று இல்லை. ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்துக் கொள்ளக் கூடாது; ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்தவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால், அதில் வேலை செய்கின்ற ஒப்பந்தத் தொழிலாளியையே நிரந்தரப் படுத்தவேண்டும் என்று சட்டம் இல்லை. அதனால் தான் இதை நல்ல முறையிலே நிலைப்படுத்த முடியவில்லை. அதற்காக மத்திய அரசு இப்போது புதிய சட்டம் ஒன்றை இயற்ற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயமுத்தூர் மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி.

* 2599—திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயமுத்தூர் மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி என்ற ஓர் அமைப்பை உருவாக்கிட அரசு ஆய்வு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் மின்சார வேகத்தில் வளர்ந்து வரும் தொழில் நகரான கோவை மாநகரத்தில் மெட்ரோபாலிட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி என்ற அமைப்பு உருவானால் தான் நகரத்தினுடைய வளர்ச்சி, நகரத்தினுடைய பல்வேறு திட்டங்கள் செழிப்படையும் என்பதை அரசு அறிந்து இனி யாவது அப்படி ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு அரசு, முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மே 11]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் விரிவடைவதற்கு, கோவை உள்ளூர் திட்டப் பகுதி அரசாணை எண் 1502 நாள் 21—6—1974 மூலம் இந்தத் திட்டம் கோவை மற்றும் புறநகரப் பகுதிகள் சீராகவும், ஒருங்கிணைந்து வளர்ச்சி அடையவும் 1974ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது. அதன் அடிப்படையில் மாநகராட்சியின் தனி அலுவலர் தலைவராகப் பொறுப்பேற்றும், மாநகராட்சி அதிகாரி செயலர் மற்றும் உறுப்பினராகப் பொறுப்பேற்றும், அந்தப் பகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள் அங்கத்தினர்களாக இருந்தும் உருவாவதற்காக அரசினுடைய பரிசீலனையில் தற்போது இருக்கின்றது. இந்தக் குழுமத்தின் மூலம் கோவை மற்றும் புறநகரப் பகுதிகள் வளர்ச்சி அடைவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையிலும், நிர்வாக வசதியை முன்னிட்டும் கோவை நகராட்சி 80 கோட்டங்களாக தற்போது பிரிக்கப்பட்டு இருக்கின்றது. ஆகவே நகர அமைப்பினுடைய விதிகளின்படி வீடுகள், கட்டிடங்கள் உட்பட கட்டவும், இணைப்புச்சாலைகள் புறவழிச் சாலைகளை ஒழுங்குபடுத்தவும், அடிப்படை சுகாதார வசதிகளைச் செய்யவும் மெட்ரோபாலிட்டன் அத்தாரிட்டி என்பது அவசர அவசியமாக இருக்கின்ற காரணத்தினாலே அமைச்சர் அவர்கள் விரைந்து அந்த அமைப்பின் மூலம் வளர்ந்து வரக்கூடிய மாநகரத்தினுடைய சகலபணிகளையும் விரைவாக அமல்படுத்ததுவதற்கு செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்றும், அதை விரைந்து செயல்படுத்துவதற்கு உத்ரவு பிறப்பிப்பார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அத்தனைப் பணிகளையும், இந்தக் கோவை உள்ளூர் திட்டப் பகுதி தற்போது செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]